## கரூர் மாநகராட்சி

**2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம்தேதி திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் சாதரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

### பொருள்கள்

1) வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தாம் முன் மொழிவாக உள்ள திர்மானம் கரூர் மாநகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்.4 ஆத்தூர் ரோடு, தீரன் சின்னமலை முதல் கிராசில் நீண்டகாலமாக தெருவிளக்கு இல்லாததால் அப்பகுதி பொது மக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளது எனவே இப்பகுதியில் புதியதாக மின்பாதை அமைத்து மின்விளக்கு வசதி செய்து தர இம்மான்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.2084** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தாம் முன் மொழிவாக உள்ள திர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.34 கூத்தரிசிக்காரத் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளி வளாகத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் உள்ளது. இம்மையத்திற்கு தினந்தோறும் சுமார் 100 முதல்150 பேர் வந்து படித்து விட்டு செல்கின்றனர். மேற்கண்ட மையத்திற்கு தனியாக வழி இல்லாமல் பள்ளி வளாகத்தில் நுழைந்து செல்கின்றனர். அதுசமயம் மேற்கண்ட பள்ளியில் அடிக்கடி அரசு தேர்வுகள் நடைபெறவதால் மேற்கண்ட மையத்திற்கு சென்ற வர அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு என்று தனி வழி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இவ்வழி ஜவஹர் பஜார் வழியாக தனி வழி அமைக்கவும் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைபள்ளி உள்ளது. இப்பள்ளியில் மெயின் கேட் இல்லாமல் உள்ளதால் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மெயின் கேட் அமைக்கவும், பிளாக் மூலம் தளம் அமைப்பதும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணிகள் செய்து முடிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.16.50 இலட்சத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 8426/2021)**

**தீர்மான எண்.2085** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

3) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 அண்ணா நகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இத்தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் வார்டு எண். 30 மற்றும் 31 பகுதிகளுக்கு செல்கிறது. மேலும் குடிநீர் விநியோகம் செய்யும் போது இரண்டு வார்டுகளுக்கும் சேர்த்து விநியோகம் செய்யுப்படுவதால் வார்டு எண்.31 பெரியசாமி நகர் பகுதிக்கு சீராக குடிநீர் செல்லாமல் தடைபடுகிறது. அதனால் பெரியசாமி நகர் பகுதிக்கு செல்லும் மெயின் குழாய் மாற்றி காந்தி நகர் பகுதிக்கு செல்லும் குடிநீர் விநியோக குழாயுடன் சேர்த்து இணைத்தால் குடிநீர் அனைத்து பகுதிக்கும் சீராக செல்ல இயலும். அதனால் பொதுமக்கள் குடிநீர் பயன்படுத்துவது எளிதாக இருக்கும் எனவே மெயின் குழாய் மாற்றி இணைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.75 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.0.75 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/2024)**

**தீர்மான எண்.2086** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

4) கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.12 முதல் 19 வரை மற்றும் 38 முதல் 42வரை உள்ள 13 வார்டுகளில் 280 ஆழ்துளை கிணறுகளில் மின் மோட்டார் வைத்து பிற உபயோகத்திற்கான குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்படி மினிபவர் பம்புகளில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுகிறது. மேற்படி பழுதுகளை நீக்கவும் மற்றும் பைப் லையன்கள் மற்றும் நீர் சேகரிப்பு தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளில் பழுதுபட்ட மின்மோட்டார்களை மாற்றி புதிதாக அமைக்கவும், மற்றும் பழுதுபட்ட குடிநீர் தொட்டிக்கு பதிலாக புதிய HDPE தொட்டிகள் அமைக்கவும் மற்றும் ஆழ்துளை கிணறு பராமரிப்பு தொடர்பான அனைத்து பணிகளுக்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ3/2024**

**தீர்மான எண்.2087** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

5)கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.12க்குட்பட்ட பசுபதிபாளையம் வடக்கு பகுதியில் ஆண்டாள் நகரில் உள்ள குறுக்கு தெருவிற்கு குடிநீர் விநியோகம் குழாய்கள் இல்லை. மேற்படி இடத்தில் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையாளர் மற்றும் கவுன்சிலர் உடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது பொதுமக்களின் கோரிக்கையான குடிநீர் விநியோக குழாய் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் அப்பகுதியில் 2 அடி குழாய் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வீடுகள் அதிகமாகி விட்டதாலும், மேற்படி குழாய் அமைத்து பல வருடங்கள் ஆவதாலும், தற்அபாது 3” அளவுள்ள பி.வி.சி குழாய் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தை முன்னிட்டு குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/2024)**

**தீர்மான எண்.2088** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

6) கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.12ல் உள்ள பகுதிகளை வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டதில் கீழ்கண்ட அத்தியாவசியமான மராமத்து பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. பசுபதிபாளையம் தெற்கு தெருவில் மழை நீர் சாலையில் வழிந்தோடுவதால் அதன் ஒரு பகுதியினை செப்பனிடவும், மற்றும் அந்த வார்டு பகுதிகளில் தெற்கு தெருவையும் திருச்சி ரோட்டையும் இணைக்கும் குறுகிய சிமெண்ட் சாலையையும் மற்றும் நான்கு சிறுபாலங்களையும் சீரமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே இரண்டு பணிகளை

மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/2024)**

**தீர்மான எண்.2089** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

7) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.30 அண்ணா நகர் கௌரிபுரம், திரு.வி.க ரோடு மற்றும் சின்னடாண்டாங்கோவில் ரோடு போன்ற பல்வேறு தெருக்களில் புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல், பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல் மற்றும் மழை போன்ற பல்வேறு காரணங்களால் சாலைகள் சேதம் அடைந்துள்ளது. அதனால் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட வார்டு எண்.30 தெருக்களுக்கு தார் பேட்ச் வேலை செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணி செய்து முடிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2024)**

**தீர்மான எண்.2090** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

8) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1 வார்டு எண்.11 அண்ணா வளைவு கிழக்கு தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான (மாவட்ட முக்கிய சாலை MDR) வாங்கல் மெயின் ரோட்டில் பாதாள சாக்கடை மெயின் ஆர்.சி.சி குழாய் அரிப்பின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளதை சரி செய்வதற்காக மெயின் லையன் முழுவதும் புதிதாக சுமார் 90.00 மீட்டர் நீளத்திற்கு மாற்றியமைக்கப்பட்டது. தற்சமயம் பருவ மழை பெய்து வருவதால், மேற்கண்ட நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலை மிகவும் சேதமடைந்து மேடு பள்ளமாக இருப்பதால் பொதுமக்கள், வாகனங்கள் செல்லமுடியாமல் சிரமத்துக்குள்ளவதாலும், விபத்துக்கள் ஏற்படுவதாலும் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயர்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால், எதிர்வரும் 24.11.2024 அன்று மராத்தான் மற்றும் வாக்கத்தான் நிகழ்ச்சி துவங்கி இச்சாலைகள் வழியாக செல்ல இருப்பதால் மேற்படி சாலையினை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 19.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95லட்சம்</u>

1. M/s.V.Poobathi and Co. Karur, மதிப்பீட்டைவிட0.11%சதம் குறைவு
2. M/s.Bharathi Construction, Karur மதிப்பீட்டைவிட 1.39%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.Poobathi and Co. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் (இ1/ 3096/2024)

**தீர்மான எண்.2091** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

9) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –3 வார்டு எண்.18ல் அமைந்துள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மாநகராட்சி மூலம் Bulk Water Supply Connection மூலம் நாள் ஒன்றுக்கு குடிநீர் 2 லட்சம் லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் அளவீடு செய்யும் அளவுமானி பழுதடைந்து விட்டதால் புதிய அளவுமானி பொருத்துதல் மிகவும் அவசியமாகிறது. புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜீட்டல் அளவு மானி பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.10 லட்சத்தினை கரூர் மாநகராட்சிக்கு செலுத்த கோரி முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, கரூர் அவாகளின் மூலம் 04.09.2024அன்று ரூ.2.10 இலட்சத்தினை இம் மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜீட்டல் அளவு மானி பொருத்தும் பணியினை ரூ.2.10 லட்சத்தில் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கரூர் அவர்களின் மூலம் பெறப்பட்ட தொகை ரூ.2.10 லட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ2/1539/2024)**

**தீர்மான எண்.2092** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

10) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26740/2024/SBM -1 (1), நாள். 26.09.2024ல் தூய்மை பாரத இயக்கம்,(Urban 2.0) – 8வது மாநில உயர் அதிகார குழு கூட்ட நடவடிக்கையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் புதியதாக சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

❖ <u>பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ.எண் | கழிப்பிடத்தின் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) | மத்தியஅரசு நிதி (ரூ.லட்சத்தில்) | மாநில அரசு நிதி (ரூ.லட்சத்தில்) | மாநகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சமுதாய கழிப்பிடம் | 8 | 45.00 | 18.90 | 12.60 | 13.50 |
| 2 | பொது கழிப்பிடம் | 2 | 12.30 | 4.92 | 3.32 | 4.06 |

❖ <u>புதிதாக மேற்கொள்ளப்படும் கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ. எண் | கழிப்பிடத்தின் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) | மத்தியஅரசு நிதி (ரூ.லட்சத்தில்) | மாநில அரசு நிதி (ரூ.லட்சத்தில்) | மாநகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சமுதாய கழிப்பிடம் | 1 | 18.00 | 7.92 | 5.22 | 4.86 |
| 2 | பொது கழிப்பிடம் | 3 | 61.00 | 26.23 | 17.08 | 17.69 |

மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளின் மதிப்பீட்டிற்கு கீழ்கண்ட இடங்களில் பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

❖ <u>பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் சமுதாய கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 20 | வார்டு எண்.20 கண்ணார சந்து பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் பழுது பார்த்தல் பணி | 7.00 |
| 2 | 33 , 35 | வார்டு எண்.33 மற்றும் 35 வஞ்சியம்மன் கோவில் தெரு மற்றும் கனகமுடி சந்து பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் பழுது பார்த்தல் பணி | 8.50 |
| 3 | 19 | வார்டு எண்.19 கொளந்தானூர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் பழுது பார்த்தல் பணி | 5.00 |
| 4 | 43 | வார்டு எண்.43 தாந்தோணி வடக்கு தெருவில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் கூடுதல் பணி | 3.00 |
| 5 | 47 | வார்டு எண்.47 கரட்டுப்பாளையம் பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் கூடுதல் பணி | 5.00 |
| 6 | 47 | வார்டு எண்.47 பழைய சுக்காலியூர் வடக்கு பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் கூடுதல் பணி | 7.00 |
| 7 | 47 | வார்டு எண்.47 பழைய சுக்காலியூர் தெற்கு பகுதியில் சமுதாய கழிப்பிட மராமத்து மற்றும் கூடுதல் பணி | 6.50 |
| 8 | 48 | வார்டு எண்.48 காளியப்பனூர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் மராமத்து மற்றும் கூடுதல் பணி | 3.00 |
| | | மொத்தம் | **45.00** |

❖ <u>பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பொது கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 39 | வார்டு எண்.39 காந்திகிராமம் பகுதியில் பொது | 6.50 |

| | | | |
|---|---|---|---|
| | | கழிப்பிடம் மராமத்து மற்றும் பழுது பார்த்தல் பணி | |
| 2 | 40 | வார்டு எண்.40 காந்திகிராமம் தெற்கு பகுதியில் பொது கழிப்பிடம் மராமத்து மற்றும் பழுது பார்த்தல் பணி | 5.80 |
| | | மொத்தம் | **12.30** |

❖ <u>புதிதாக மேற்கொள்ளப்படும் சமுதாய கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 21 | வார்டு எண்.21 வெங்கடேஷ்வரா சாலை பகுதியில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 18.00 |
| | | மொத்தம் | **18.00** |

❖ <u>புதிதாக மேற்கொள்ளப்படும் பொது கழிப்பிடத்தின் விவரம்</u>

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 20 | வார்டு எண்.20 வாசவி பள்ளி எதிரில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணி | 11.00 |
| 2 | 31 | வார்டு எண்.31 பசுபதி லே அவுட் பகுதியில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணி | 17.00 |
| 3 | 37 | வார்டு எண்.37 தாந்தோணி மயானம் அருகில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணி | 33.00 |
| | | மொத்தம் | **61.00** |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

| | |
|---|---|
| 1 | மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |
| 2. | மேற்படி அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு மாநகராட்சி பங்களிப்பு தொகை ரூ.40.11 இலட்சத்தினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/4354 /2024** |

**தீர்மான எண்.2093** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**11)** கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.29 இராமானுஜம் நகர் பகுதியில் இருக்கும் சிறுபாலம் உடைந்து மழை காலங்களில் மழை நீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்கிறது. அவ்வாறு மழை நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலை உருவாகிறது. எனவே மேற்கண்ட பாலத்தை புதிதாக கட்டும் பணிக்கு மூன்றாம் முறையாக 29.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.30லட்சம்</u>

1. Thiru K.Murugan, Erode மதிப்பீட்டைவிட0.05%சதம் குறைவு

2. M/s.RPS Construction, Karur மதிப்பீட்டைவிட1.21%சதம் அதிகம்

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1849, நாள்.28.06.2024ம் தேதி ரூ.2.30 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru K.Murugan, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ1/ 3096/2024)

**தீர்மான எண்.2094** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

12) கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.38 கருப்பகவுண்டன்புதூர் பகுதியில் மழை நீர் வடிகால் நீண்ட நாட்களாக சேதமடைந்துள்ளது. அந்த பகுதி வழியாக பள்ளிக்கு செல்லும் வாகனங்கள் மற்றும் மக்கள் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் சாலையை கடப்பது மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி மழை நீர் வடிகாலை மராமத்து செய்து கட்டினால் சாலை அகலம் அதிகமாக கிடைக்கும். எனவே போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வடிகாலை புதியதாக கட்டும் பணிக்கு மூன்றாம் முறையாக 29.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50லட்சம்**</u>

1. Thiru. P.Nallusamy, Karur மதிப்பீட்டைவிட0.04%சதம் குறைவு

2. M/s.A Sun PowerEngineers, Karur மதிப்பீட்டைவிட1.74%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1872, நாள்.28.06.2024ம் தேதி ரூ.2.50 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru. P.Nallusamy, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ1/ 3164/2024)

**தீர்மான எண்.2095** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

13) கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 ஆகிய 8 வார்டு பகுதிகளிலுள்ள 237 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மின் விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகள், கேபிள்கள் ஆழ்துளை கிணறுகளிலுள்ள குழாய்கள் மாற்றுதல், ஸ்டாட்டர், பேனல்போர்டு பழுதுப்பணிகள், குழாய் பழுது பணிகள் பழுதடைந்து சின்டெக்ஸ் டேங்குகளுக்கு பதிலாக புதியதாக மாற்றும் ஆகிய பழுது பணிகளை மேகொள்ளும் பணிக்கு முதன்முறையாக 25.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்**</u>

1. M/s.Malliga Engineering contractor, Karur மதிப்பீட்டைவிட0.03%சதம் குறைவு

2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 0.50%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1995, நாள்.30.09.2024ம் தேதி ரூ.25.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering contractor, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.

(இ3/ 3730/2024)

**தீர்மான எண்.2096** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

14) கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.43ல் இலங்கை அகதிகள் முகாம் பின்புறம் உள்ள அலுவலகம் பழுதடைந்துள்ளதால் அந்த பகுதிக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த சிறுபாலத்தில் பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும், வாஞ்சிநாதன் நகர் முதல் கிராஸ் தெருவில் வடிகாலில் கழிவு நீர் தேங்கி வெளியேறாமல் தேங்கி நிற்பதால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால், சிறுபாலம் அமைத்து அருகிலுள்ள வடிகாலுடன் இணைக்க வேண்டியுள்ளது. மேலும் வார்டு எண்.45 வசந்தம் நகர் பகுதி மற்றும் வார்டு எண்.44 டி.என்.ஹச்.பி பகுதியில் சிறுபாலம் சிலாப் பழுதடைந்துள்ளதால் பழுதுப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 25.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்**</u>

1. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட0.04%சதம் குறைவு

2. M/S,RPS Construction, Karur மதிப்பீட்டைவிட 0.46%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1990, நாள்.30.09.2024ம் தேதி ரூ.5.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.M.Loganathan, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.

(இ3/ 4515/2024)

**தீர்மான எண்.2097** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

15) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1ல் வார்டு எண்.6ல் கருப்பண்ண கோவில் மெயின் ரோடு எக்விடாஸ் பள்ளி முன்புறம் உள்ள சாலையில் மாநகராட்சி பாதாள சாக்கடை புதை வடிகால் மெயின் லைன் உள்ளது. மேற்காணும் இடத்தில் உள்ள பாதாள சாக்கடை மெயின்

லைன் மனிதகுழி எண்.17 முதல் மனிதகுழி எண்.18 வரை உள்ள சுமார் 40 மீட்டர் நீளத்திற்கு 500 எம்.எம் ஆர்.சி.சி பைப் அரிப்பு ஏற்பட்டு தற்சமயம் சாலையின் மத்தியில் முன் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. அதனால் கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு அபாயம் ஏற்படும் நிலையில் உள்ளதாலும் மற்றும் அருகில் பள்ளிக்குழந்தைகள் செல்லும் பாதையாகவும் உள்ளதாலும் மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள உடைந்த 500 எம்.எம். ஆர்.சி.சி பைப் லைனை மாற்றி புதிதாக 40 மீட்டர் நீளத்திற்கு புதிதாக மெயின் லையன் அமைக்கவும் மற்றும் சாலையினை சீர் செய்யும் பணிக்கு முதன்முறையாக 06.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00லட்சம்</u>

1 M/s.RPS Construction. Karur, மதிப்பீட்டைவிட0.02%சதம் குறைவு

2 Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 0.27%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.2065, நாள்.21.10.2024ம் தேதி ரூ.16.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.RPS Construction. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் (இ5/ 4937/2024)

**தீர்மான எண்.2098** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**16)** கரூர் மாநகராட்சி வாங்கல் சாலை அரசு காலனியிலுள்ள உரக்கிடங்கில் (மேற்கு பகுதி) ஏற்படும் நேரங்களில் தீயணைப்பு துறை வாகனங்களுக்கு தண்ணிரை கொண்டும் அணைக்கும் பணியின் போது அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதால் வாங்கல் தலைமை குடிநீர் நீரேற்று நீலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு செல்லும் 450 mm DI பம்பு குழாயிலிருந்து உரக்கிடங்கு பகுதியிலுள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு இணைப்பு பணிகள் மேற்கொள்ளவும், வாகனங்களுக்கு தண்ணீரை நிரப்பும் வகையில் குழாய் வசதிகள் (Hydrant) பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 25.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50லட்சம்</u>

1. M/s.AS Power Solution, Trichy மதிப்பீட்டைவிட0.05%சதம் குறைவு
2. M/s.ASV Construction, Trichy மதிப்பீட்டைவிட 5.00%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1991, நாள்.30.09.2024ம் தேதி ரூ.1.50 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.AS Power Solution, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ3/ 4516/2024)

**தீர்மான எண்.2099** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

17) தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் படி ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் இந்திய அரசாங்கத்தின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம் வழங்கும் அ) திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநகரம் (+) (ODF + (Open Defecation Free + City) சான்றும், ஆ)குப்பையில்லாத மாநகரம் (GARBAGE FREE CITY) 3 ஸ்டார் சான்றும் பெறுவது கட்டாயமக்கப்பட்டுள்ளது. எனவே கரூர் மாநகராட்சியினை அ) திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநகரம் (+) (ODF + (Open Defecation Free + City) மற்றும் ஆ) குப்பையில்லாத மாநகரம் (GARBAGE FREE CITY) 3 ஸ்டார் மாநகராமாக அறிவிப்பதற்கும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநகரம் மற்றும் குப்பையில்லாத மாநகரம் 3 ஸ்டார் என்ற அறிவிப்பினை பொதுமக்கள் தங்களுடைய ஆட்சேபனைகளை 15 நாட்களுக்குள் தெரிவிக்க தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (8098/2014/எச்1)

**தீர்மான எண்.2100** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

18) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.23 மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையாளர் மற்றும் 46 மாமன்ற உறுப்பினர் இருக்கையும், நவீன வசதியுடன் கூடிய மைக் அமைக்க வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மாமன்ற கூட்ட அரங்கில் மாமன்ற கூட்ட பொருள் சம்மந்தமாக விவாதிக்க மைக் அவசியமாகிறது. எனவே மாமன்ற கூட்ட அரங்கில் 49 எண்ணிக்கை உள்ள மைக் அமைக்கும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | M/s.Sunmathi Construction, Karur | 0.06 % குறைவு |
| 2) | M/S,Ramachandra Builders, Karur | 1.15% அதிகம் |
| 3) | M/s. Sri Krishna Traders, Karur | 1.89% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 10,80,519/–ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ1/871 /2023)

**தீர்மான எண்.2101** பதிவு செய்யப்பட்டது

19) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 –25 மற்றும் 30–35 ஆகிய பகுதிகளுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மார்ச் மாதம் காவேரி ஆற்றில் தண்ணீர் வரத்து மிகவும் குறைந்து , வடக்கு கரையின் ஓரமாக செல்வதினால் இம் மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்ய போதுமான தணணீர் கிடைக்கப் பெறவில்லை. மேலும் பாராளுமன்ற தேர்தல் 2024 நடைபெற உள்ளதாலும், கோடை காலமாக உள்ளதாலும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு காவேரி ஆற்றில் வடக்கு கரையோரமாக செல்லும் தண்ணீரை கிட்டாச்சி இயந்திரம் மூலம் வாய்க்கால் அமைத்து நீர் சேகரிப்பு கிணற்றின் அருகில் தண்ணீரை கொண்டு சேர்த்து நீர் ஊற்றை அதிகப்படுத்தி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பணிக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் ரூ.1,30,000/–மதிப்பீட்டில் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் . |
|---|---|---|
| 1) | M/s.A.S.Power Solution, Trichy | 0.04% குறைவு |
| 2) | Vishwa Infrastructures, Kanniyakumari | 0.17% அதிகம் |
| 3) | Vairam Engineering & Consulting services, Madurai | 0.51% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.A.S.Power Solution, Trichy அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்த செலவினத் தொகை ரூ1,23,671/- ஐ மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ3/ 2350 /2024)

**தீர்மான எண்.2102** பதிவு செய்யப்பட்டது

20) கரூர் சட்டமன்ற தொகுதியில் (023) பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024 135 கரூர் சட்டமன்ற தொகுதி மண்டலம் –4க்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகள், மின்விளக்கு வசதிகள் சாய்வு தளம், பிளக் பாயிண்ட் மற்றும் சாமியானா பந்தல் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பள்ளிகளின் பெயர் | வாக்குச்சாவடி மையங்களின் எண்ணிக்கை | வாக்குச்சாவடி எண் |
|---|---|---|---|
| 1 | திருமாநிலையூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி | 2 | 198,199 |
| 2 | திருமாநிலையூர் சமுதாயக்கூடம் | 2 | 200,202 |
| 3 | அருகம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 1 | 255 |
| 4 | கோடங்கிபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 1 | 257 |
| 5 | தோரணக்கல்பட்டி ஊராட்சி ஒன்றிய | 1 | 258 |

| | | | |
|---|---|---|---|
| | துவக்கப்பள்ளி | | |
| 6 | பண்டுதகாரன்புதுார் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 1 | 259 |
| 7 | செல்லாண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 3 | 260,261,262 |
| 8 | வெங்கக்கல்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 1 | 256 |
| 9 | ராயனுார் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 6 | 263,264,265,266,267, 268 |
| 10 | அரசு கலைக்கல்லுாரி தாந்தோணிமலை | 9 | 219,224,225,27,235, 236,250,251,252 |
| 11 | காளியப்பனுார் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 2 | 254,254 |
| 12 | அரசு உயர்நிலைப்பள்ளி தாந்தோணி மலை | 9 | 216,217,218,220,221, 222,223,232,233 |

மேற்கண்ட 38 வாக்குச்சாவடி மையங்களில், சாமியானா பந்தல் அமைத்தல், டேபிள் , இருக்கை வசதிகள், குடிநீர் வசதி, மின் விசிறி வசதிகள் , பிளக் பாயிண்ட், மின் வசதிகள் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் ரூ.1,30,000/–மதிப்பீட்டில் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | Thiru.M. Loganathan, Karur | 0.08% குறைவு |
| 2) | Sakthi Engineering Contractor, Karur | 2.98% அதிகம் |
| 3) | Magil Construction, Karur | 6.47% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Thiru.M. Loganathan, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ620000/-மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/ 1913 /2024)

**தீர்மான எண்.2103** பதிவு செய்யப்பட்டது

**21)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்.3 வார்டு எண்.38 பகுதியில் திருப்பதி நகர் வழியாக திண்ணப்பா நகர் செல்லக்கூடிய சாலையின் மத்தியில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக அமைந்துள்ள இரண்டு HT மின் கம்பங்களை வடபுறமாக 10 அடி துாரத்திற்கு மாற்றி அமைத்து தரும் பணிகான மதிப்பீட்டு கட்டணம் ரூ.2,88,110/–ஐ செலுத்தக்கோரி தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலைஅவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் .3 வார்டு எண்.38 பகுதியில் திருப்பதி நகர் வழியாக திண்ணப்பா நகர் செல்லக்கூடிய சாலையின் மத்தியில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக அமைந்துள்ள இரண்டு HT மின் கம்பங்களை வடபுறமாக 10

அடி தூரத்திற்கு மாற்றி அமைத்து தரும் பணிகான மதிப்பீட்டு கட்டணம் ரூ.2,88,110/–ஐ தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலை அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக் குறிப்பு:**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2,88,110–ஐ மாநகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/ 1433 /2022)**

**தீர்மான எண்.2104** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

22) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1 வார்டு எண்.28 திருக்காம்புலியூர் நாயக்கர் தெருவில் உள்ள தெருக்களில் இருந்து வரும் கழிவு நீர் செல்லமுடியாமல், ஒரே இடத்தில் தேங்கி அங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட இடத்தில் புதிதாக பாதாள சாக்கடை பகிர்மான லைன் அமைக்கவும், சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.9.50 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/ 5704 /2024)**

**தீர்மான எண்.2105** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

23) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.20–27 மற்றும் வார்டு எண்.29–35 பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றது. மேற்படி சாலைகள் அமைக்கும் பணியில் ரோடு மார்க்கிங் பணி செய்வதற்கு வழிவகை இல்லாத காரணத்தினால் ரோடு மார்க்கிங் செய்யாமல் உள்ளது. மேலும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்ட சாலையில் வேகத்தடையில் மார்க்கிங் இல்லாத காரணத்தால் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேற்படி பணியினை உடன் செய்து முடிக்க சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது. எனவே பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட வார்டு பகுதிகளில் உள்ள சாலைகளில் ரோடு மார்க்கிங் பணியினை செய்யவும், வேகத்தடைகளில் வெள்ளைக்கோடுகள் இடுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரு.6.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.6.50 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**( இ1/5825/2024)**

**தீர்மான எண்.2106** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

24) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –4 வார்டு எண்.36 திருமாநிலையூர் பகுதியில் சிறுபாலம், வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது.,

வடிகால் கழிவு நீர் வெளியேறாமல் தேங்கி நிற்பதால், சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் புதிதாக வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கவும், , சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளதால் புதியதாக சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/5825/2024)**

**தீர்மான எண்.2107** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

25) கரூர் மாநகராட்சியில் 6வது நிதிக்குழு மானியம் 2024–2025ம் ஆண்டின் கீழ் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –2 முத்துக்குமாராசாமி பேருந்து நிலையத்தில் உள்ள வடபுற பகுதியில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர்சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25983/2024/எம்ஏ1, நாள்.13.11.2024ல் மேற்படி வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு அஸ்திவாரம் கட்டுவதற்கு மண் பரிசோதனை பெறப்பட்டு மீள சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வணிக வளாகம் கட்டும் பணிகளுக்கு மண்பரிசோதனை செய்வதற்கு ரூ.30000/–மும் திட்டமதிப்பீடு தயாரிக்க தனியார் கலந்தாலோசகரை நியமனம் செய்யும் பணிக்கு ரூ.3,00,000/– மும் ஆக மொத்தம் ரூ.3,30,000/–ஐ வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.3.30 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/ 5824 /2024)**

**தீர்மான எண்.2108** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

26) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –4 வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 பகுதிகளிலுள்ள தார்சாலைகள் பழுதுகள் ஏற்பட்டு மழைக்காங்களில் தண்ணீர் தேங்குவதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதால் பழுதடைந்த தார் சாலைகளில் பேட்ச் ஒர்க் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/5675/2024)**

**தீர்மான எண்.2109** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

27) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –4 வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 சாலைகளிலுள்ள வேகத்தடையில் வெள்ளை நிறக்கோடுகள் இல்லாத இடங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதால், தார் சாலைகளில் வெள்ளை கோடுகள் அமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதின் பேரில் மண்டலம் 4க்குட்பட்ட தார் சாலைகளில் தெர்மோ பிளாஸ்டிக் வெள்ளை கோடுகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/ 5676/2024)**

**தீர்மான எண்.2110** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

28) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.20–27 ஆகிய பகுதிகளில் பருவமழையின் காரணமாக பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், குடிநீர் திட்டப்பணிகளின் மூலமாக புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கும், புதை வடிகால் இணைப்பு வழங்குவதற்கும், குடிநீர் மற்றும் புதைவடிகால் பராமரிப்பு பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், மேற்படி சாலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/5826 /2024)**

**தீர்மான எண்.2111** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

29) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.20 –25 மற்றும் 30–35 பகுதிகளுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் சேகரிப்பு கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி நீருந்து நிலையத்தில் நீர் நிரப்பி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நீர் சேகரிப்பு கிணற்றில் நீர் ஊற்று இல்லாததால் குடிநீர் விநியோகம் சீராக விநியோகக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக 3.00 மீட்டர் விட்டமுள்ள வட்ட கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.0 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள்– 2023 பிரிவு எண்.235(3) ன்படி அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sri Krishna Traders, Contractor, Karur | 0.12% குறைவு |
| 2) | Thiru.T,Sundarraj, Karur | 0.36% அதிகம் |

| | | |
|---|---|---|
| 3) | M/S.CVM & Karur | 1.14% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள்– 2023 பிரிவு எண்.235(3) ன்படி அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Krishna Traders, Contractor, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.19,28,976/– -மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ளமாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/7481 /2023)

**தீர்மான எண்.2112** பதிவு செய்யப்பட்டது

30) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –2 வார்டு எண்.20 –25 மற்றும் 30–35 பகுதிகளுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் சேகரிப்பு கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி நீருந்து நிலையத்தில் நீர் நிரப்பி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் பற்றாக்குறையை போக்க தற்போது புதிதாக வட்ட கிணறு அமைக்கும் பணி நடைபெறுகிறது. மேற்படி வட்ட கிணற்றில் புதியதாக 25 எச்.பி மின் மோட்டார், பேனல் போர்டு காப்பர் கேபிள் மற்றும் 150 mmGI Pipe, GI மெயின் லையன் வட்ட கிணற்றிலிருந்து நீருந்து நிலையம் வரை அமைப்பதற்கு பைப் லையன் அரிக்காத வண்ணம் Anchoring அமைக்கும் பணி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள்– 2023 பிரிவு எண்.235(3) ன்படி அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sri Krishna Traders, Contractor, Karur | 0.13% குறைவு |
| 2) | Thiru.T,Sundarraj, Karur | 0.348% அதிகம் |
| 3) | M/S.CVM & Karur | 3.66% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள்– 2023 பிரிவு எண்.235(3) ன்படி அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Krishna Traders, Contractor, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.23,34,018/-மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ளமாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/7482 /2023)

**தீர்மான எண்.2113** பதிவு செய்யப்பட்டது

31) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மாரியம்மன் திருவிழா வைகாசி பெருவிழா 12.05.2024 முதல் 09.06.2024 வரை கொண்டாடப்படவுள்ளது. இது சமயம் அருள்மிகு மாரியம்மன் வகையறா திருக்கோயில்கள் பரம்பரை அறங்காவலர், அவர்களின் கடிதத்தில் கரூர் மாநகராட்சி மூலமாக பின்வரும் அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கோரியுள்ளார்கள். பண்டிகைகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்களுக்கு தற்காலிக கழிப்பறை வசதிகள், நகரில் முக்கிய இடங்களில்

பொதுமக்கள் கூடும் இடங்களில் சின்டெக்ஸ தண்ணீர் தொட்டி மூலம் சுகாதாரமான குடிநீர் வசதி, அமராவதி ஆற்றின் கரையோரத்தில் கருப்பாயி கோயில் துறை மற்றும் வஞ்சியம்மன் கோயில் துறை, மாவடியான் கோயில் துறை அமராவதி ஆற்றுப்படுகை பசுபதிபாளையம் பாலம் முதல் திருமாநிலையூர் பாலம் வரை ஆற்றின் இரு கரைகளிலும் முட்புதர்களை அகற்றி சமன்படுத்தி சுத்தம் செய்தல், குடிநீர் வசதி, சுகாதார பணிகள், தடுப்புகள் மற்றும் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sri Krishna Traders, Contractor, Karur | 0.11% குறைவு |
| 2) | Thiru.T,Sundarraj, Karur | 1.29% அதிகம் |
| 3) | M/S.CVM & Karur | 3.16% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Krishna Traders, Contractor, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.14,46,588/-மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளமாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ1/2360 /2024)

**தீர்மான எண்.2114** பதிவு செய்யப்பட்டது

32) கரூர் மாநகராட்சி மண்டலம் –3க்குட்பட்ட கீழ்கண்ட 8 இடங்களில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களால் 01.12.2024 அன்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | இடம் |
|---|---|---|
| 1 | 41 | அசோக் நகர் |
| 2 | 40 | சக்தி நகர் விளையாட்டு மைதானம் |
| 3 | 39 | டி.என்.ஹச்.பி காலனி ரேசன் கடை அருகில் |
| 4 | 15 | நரிக்கட்டியூர் கோவில் அருகில் |
| 5 | 14 | வெள்ளாளப்பட்டி கோவில் அருகில் |
| 6 | 13 | சணப்பிரட்டி |
| 7 | 16 | இ.பி காலனி விளையாட்டு மைதானம் |
| 8 | 42 | கணபதிபாளையம் கோவில் அருகில் |

மேற்கண்ட 8 இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு தேவையான சாமியானா பந்தல் அமைத்தல், மேடை அமைத்தல், சேர் வசதிகள், தரைவிரிப்பு, ஒலிபெருக்கி, குடிநீர் வசதிகள் ஆகிய பணிக்கு முதன்முறையாக **29.11.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 2.80லட்சம்**</u>

1. M/s.Sri Krishna Traders. Karur மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு

2. Thiru.P.Nallusamy, Karur மதிப்பீட்டைவிட 1.75%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Krishna Traders. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/5735/2024)

**தீர்மான எண்.2115** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

33) கரூர் மாநகராட்சி மண்டலம் –4க்குட்பட்ட கீழ்கண்ட 8 இடங்களில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களால் 01.12.2024 அன்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | இடம் |
|---|---|---|
| 1 | 47 | பட்டாளம்மன் திருக்கோவில் கோடங்கிபட்டி அருகில் |
| 2 | 46 | பகவதியம்மன் திருக்கோவில் செல்லாண்டியம்மன் |
| 3 | 45,46 | பகவதியம்மன் கோவில் ராயனூர் |
| 4 | 44 | பாரதிதாசன் நகர் (சுரேந்தர் ஹோட்டல் எதிரில்) |
| 5 | 48 | காளியப்பனூர் மெயின் ரோடு |
| 6 | 43 | மாரியம்மன் கோவில் மண்டலம் –4 அலுவலகம் அருகில் |
| 7 | 37 | வ.ஊ.சி தெரு (வாங்காலம்மன் ஸ்டோர் எதிரில்) |
| 8 | 36 | திருமாநிலையூர் பழைய பாலம் |

மேற்கண்ட 8 இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு தேவையான சாமியானா பந்தல் அமைத்தல், மேடை அமைத்தல், சேர் வசதிகள், தரைவிரிப்பு, ஒலிபெருக்கி, குடிநீர் வசதிகள் ஆகிய பணிக்கு முதன்முறையாக 29.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 2.80லட்சம்**

1. M/s.Sri Krishna Traders. Karur மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு

2. Thiru.P.Nallusamy, Karur மதிப்பீட்டைவிட 1.75%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Krishna Traders. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/5736/2024)

**தீர்மான எண்.2116** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**34)** கரூர் மாநகராட்சி மண்டலம் **–1** வார்டு எண்.**1** முதல் **11** மற்றும் **28** வரை உள்ள பகுதிகளுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையம் காவேரி ஆற்றிலிருந்து சுகாதாரமான குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு, வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை சீராக செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் காவேரி ஆற்றிர் நீர்வரத்து குறைவாக இருப்பதால் வரும் தண்ணீர் வடக்கு பகுதியில் மட்டுமே செல்வதால், வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தின் நீருந்து கிணற்றில் நீர் வரத்து குறைவதால் தொடர்ச்சியாக **120** எச்.பி மின்மோட்டார் இயக்க முடியவில்லை. எனவே வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தின் மேற்கு பகுதியில் சுமார் **4** கிலோ மீட்டர் துாரத்தில் இருந்து **210** Hittachi கொண்டு காவேரி ஆற்றில் தண்ணீரின் போக்கை மாற்றி வாய்க்கால் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக **29.11.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்**</u>

1.M/s.AS Power Solution, Trichy மதிப்பீட்டைவிட**0.05**%சதம் குறைவு

2.M/s.ASV Construction, Trichy மதிப்பீட்டைவிட 5.00%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**2071**, நாள்**21.10.2024**ம் தேதி ரூ.**5.00** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.AS Power Solution, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ**2/1309**/2024)

**தீர்மான எண்.2117** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**35)**திரு.பா.பூபதி **16**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி **16**வது வார்டுக்குட்ப்பட்டபகுதியில் இ.பி.காலனி பிள்ளையார் கோவில் மெயின் ரோடு பகுதியில் **10** தரைமட்ட வடிகால் வசதி பாலங்கள் சேதமடைந்து பொதுமக்கள் இடையூராக உள்ளது அதனை அகற்றி புதுபித்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்.2118** திரு.பா.பூபதி **16**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.K.பசுவை சக்திவேல் **17**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**36)**திரு.பா.பூபதி **16**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி **16**வது வார்டுக்குட்ப்பட்டபகுதியில் மருத்துவ கல்லுாரி கழிவுகளை வெளியேற்றும் வகையில் வடிகால் வசதி அமைக்கப்பட்டது. அதில் இரயில்வே தடம் முன்பாக

சுமார் 100அடி நீளம் குடியிருப்புக்குட்பட்ட இடத்தில் வடிகால் வசதி அமைக்காமல் விடுபட்டுள்ளது. விடுபட்டுள்ள இடத்தில் வடிகால் வசதி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2119** திரு.பா.பூபதி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.K.பசுவை சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

37)திரு.எம்.ரமேஷ் 26வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

1.பெரியார்நகர் முதல் கிராஸ் கே.ஆர்,ஜி கார்னர் முதல் சரவணன் அவர்கள் வீடு வரை மழைநீர் வடிகால் அமைத்தல்.

2.திருநகர் மெயின் ரோடு (தென்புறம்) பழுதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகாலை அகற்றிவிட்டு அவ்விடத்தில் புதிய மழைநீர் வடிகால் அமைத்தல்.

3.காமராஜபுரம் 4வது கிராஸ் (கிழக்கு) மழைநீர் வடிகால் அமைத்தல்.

4. திருநகர் 1வது கிராஸ் டெக்ஸ் வரை உள்ள பாதாள சாக்கடை குழாயை வேலுச்சாமி அவர்கள் வீடு வரை அமைத்தல்.

5.காமராஜபுரம் மேற்கு குழந்தையப்பா தெருவில் உள்ள மூன்று இஞ்சி 3 குடிநீர் குழாயை அகற்றிவிட்டு புதிய 4 குடிநீர் குழாய் அமைத்தல்.

6.கணேசன் நகர் மூன்றாவது கிராஸ் வடக்கு பகுதியில் கிழமேல் உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2120** திரு.எம்.ரமேஷ் 26வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ர.தேவி 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

38) திரு.பா.பூபதி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

நமது மாநகராட்சிக்குட்ப்பட்ட 16வது வார்டு EB காலனி ஜெ.ஜெ கார்டன் பகுதியில் பயன்பாட்டில் இருந்த சின்டெக்ஸ் டேங் முழுவதுமாக சேதமடைந்து விட்டது போர் மோட்டார் செயல்பாட்டில் உள்ளது. சின்டெக்ஸ் டேங் மட்டும் அமைத்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2121** திரு.பா.பூபதி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.K.பசுவை சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

39) திரு.பா.பூபதி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

நமது மாநகராட்சிக்குட்ப்பட்ட 16வது வார்டு EB காலனி கலாம்தெரு பகுதியில் 500கேவி மின்திறன் கொண்ட மின்மாற்றி இடையூராக சாலையின் குறுக்கே அமைந்துள்ளது. உடனடியாக பொது மக்களுக்கு இடையூறு இல்லாத இடத்தில் மாற்றி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2122** திரு.பா.பூபதி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.K.பசுவை சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

40) திருமதி.V.நிவேதா 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

1. காந்திசிலை வடக்கில் உள்ள (உழவர் சந்தை பின்புறம்) அங்கன் வாடி, ரேசன்கடை முன்பு தரைதளம் மோசமாக உள்ளது. எனவே இந்த இடத்தில் சிமெண்ட் தரைதளம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

2. நரசிம்மபுரம் வடக்கு–தெற்கு பகுதியில் ஆண்கள் பொதுக்கழிப்பிடம் இருந்தது தற்பொழுதுஅது செயல்பாட்டில் இல்லை எனவே இந்த பகுதியை சுத்தப்படுத்தி சிமெண்ட் சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2123** திருமதி.V.நிவேதா 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.எ.பாலவித்யா 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

41) திரு.A.தியாகராஜன் 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

15வது வார்டுக்குட்ப்பட்டமுல்லைநகர் பகுதியில் சின்டெக்ஸ்டேங்க் பழுது அடைந்து உள்ளதால் அதனை மாற்றி அமைத்து தருமாறும் மற்றும் பெரியார்நகர் பகுதியில் சிறுபாலம் உடைப்பு ஏற்பட்டதால் அதனை அகற்றிவிட்டு புதய பாலம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2124** திரு.A.தியாகராஜன் 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.பா.பூபதிவது 16வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

42) திரு.K.சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

17வது வார்டு ராஜகுரு நகர் (ஆர்.ஏ.நகர் மேற்கு)கரூர் டவுன்வார்டு 2 பிளாக் 37 டி.எஸ்.நெ.2474ல் DCCP Approval No SPFW No.1342/2018 ன்படி வீட்டு மனை அங்கீகாரம் பெறபட்டு வீடுகள் கட்டி பொதுமக்கள் வசித்து வருகிறார்கள் மேற்கண்ட பகுதிக்கு மெயின் வீதி முதல் கிராஸ், இரண்டாவது கிராஸ் மண்சாலையாக உள்ள சாலைகளுக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2125** திரு.K.சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.M.தங்கராஜ் 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி